DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 62/2019

Prosecution witness PW - 4

| | | |
|---|---|---|
| Name | …. | Pradap |
| Father's Name | .... | Chandrasekar |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 12th day of August 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் புதுக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகின்றேன். நான் வெல்டிங் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2018 ஆம் ஆண்டு திருவிழா நடந்தது. சுமார் 6.00 - 6-30 மணிக்கு பிரச்சனை நடந்தது. அப்போது நான் செய்யாரில் என்னுடைய ஷாப்பில் வேலைபார்த்து கொண்டிருந்தேன். அப்போது எதிரிகளுக்கும் வீரராகவன் குடும்பத்தாருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். வீரராகவனுக்கு அடிப்பட்டதாக சொன்னார்கள். அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். அது செய்யாரா, ஆரணியா என்று தெரியாது. நான் வீட்டிற்கு வரும்போது இரவு 10.00 - 10-30 மணி இருக்கும். அப்போது போலிசார் அங்கு இருந்தார்கள். அப்போது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் ஊரை சேர்ந்த கண்ணபிரான் மகன் வீரராகவன் என்பவரின் குடும்பத்திற்கும் அருந்ததிபாளையத்தை சேர்ந்த பிச்சாண்டி குடும்பத்திற்கும் வீட்டுமனை பிரச்சனை சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது. 29.05.2018 தேதி அருந்ததிபாளையத்தில் மாரியம்மனுக்கு கூழ்வார்க்கும் திருவிழா நடந்தது. அந்த திருவிழாவிற்கு பிச்சாண்டி வீட்டிற்கு அவர்கள் உறவினர்கள் வந்திருந்தார்கள். மாலை சுமார் 6.00 மணி அளவில் பிச்சாண்டி மனைவி குமாரி என்பவர் சாப்பிட்ட எச்சில் இலைகளை வீரராகவன் வீட்டு மனையில் போட்,டிருந்ததை வீரராகவனும் அவரது மனைவி அம்பிகாவும் ஏன் சாப்பிட்ட இலைகளை எங்க இடத்தில் போடுகிறீர்கள் என கேட்டதற்கு குமாரியும் அவர் கணவர் பிச்சாண்டியும் அம்பிகாவை வாய்க்கு வந்தபடி தேவிடியா வெள்ளார ஓழி என அசிங்கமாக திட்டியுள்ளார்கள். வீரராகவன் சென்று கேட்டதற்கு பிச்சாண்டி அவர் மனைவி குமாரி அவரது மகன் தமிழரசன் மூவரும் கல்லால் வீரராகவனை அடித்துள்ளார்கள். வீரராகவனுக்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டுள்ளது. பின்னர் இரவு சுமார் 9.30 மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த பாண்டுரங்கன் மகன் அரி என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எங்கள் ஊரை சேர்ந்த வீரராகவன் என்பவரின் வீட்டினிடம் சத்தம் கேட்டு நின்று பார்த்து கொண்டிருந்தபோது பிச்சாண்டி மற்றும் பிச்சாண்டி மனைவி குமாரி அவரது மகன் தமிழரசன் பிச்சாண்டி மருமகன்கள் செல்வராஜ், அன்பரசன், பிச்சாண்டியின் தங்கை முனியம்மாள் ஆகிய 6 பேர்களும் ஒன்றுசேர்ந்து கையில் தடி இரும்பு ராடு, கல் ஆகிய ஆயுதங்களுடன் வந்து வீரராகவனை பிச்சாண்டி மருமகன் செல்வராஜ் இரும்பு ராடால் அம்பிகாவின் முன்பக்க தலையில் அடித்தான். இன்னொரு மருமகன் அன்பரசன் வில்வன்கோதை என்பவரை கல்லால் தலையில் அடித்தான். பிச்சாண்டியின்

தங்கை முனியம்மாள், வீரராகவனையும் அவரது மனைவி அம்பிகாவையும் காலால் எட்டி எட்டி உதைத்தார். அனைவரும் வீரராகவனின் வீட்டு மாட்டு கொட்டகையை கீழே தள்ளி சேதப்படுத்தினார்கள். பிச்சாண்டியும் தமிழரசனும் இதோடு ஒழிந்து தொலைந்து போங்கடா என சொல்லி வீரராகவன் தலையிலும், அம்பிகாவின் தலையிலும் அடித்தார்கள் வீரராகவனும் அம்பிகாவும் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள் இந்த சம்பவத்தை நானும் அரியும் நேரில் பார்த்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 62/2019

Prosecution witness PW - 3

| | | |
|---|---|---|
| Name | …. | Kuppusamy |
| Father's Name | .... | Mannu |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 12th day of August 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் புதுக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகின்றேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை நேரத்தில் பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். வீரராகவனுக்கும் பிச்சாண்டிக்கும் பிரச்சனை என்று சொன்னார்கள். பிச்சாண்டி ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடந்தது. அப்போது எதிரிகள் வீட்டிற்கு பக்கத்து பக்கத்து வீடு இருந்தது. அப்போது அவர்களுக்கிடையே இடபிரச்சனைக்காக பிரச்சனை ஏற்பட்,டதாக சொன்னார்கள். அப்போது வீரராகவனுக்கு தலையில் அடிப்பட்டதாக சொன்னார்கள். பிச்சாண்டி குடும்பத்தார் அடித்ததாக சொன்னார்கள். அதன்பிறகு அடிப்பட்டவர்கள் ஆரணி அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்துவிட்டு வந்துவிட்டோம். அம்பிகா மற்றும் வீரராகவனை ஆரணி அரசு மருத்துவமனையில்

சேர்த்துவிட்டு வந்துவிட்டோம். போலிசார் என்னை புதுக்கோட்டையில் வைத்து விசாரித்தார்கள். அடிப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல சொன்னார்கள். ராஜ்குமார் என்பவர் எங்கள் ஊரில் கார் வைத்திருக்கிறார். அவரது வாகனத்தில் தான் ஆரணி மருத்துவமனைக்கு வீரராகவன் மற்றும் அம்பிகாவை சேர்த்தோம்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன்.